செப்டம்பர் மாதச் சிந்தனைகள்


SIGNUM FIDEI



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை

FSC

2022



PUBLISHED BY

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS -INDIA

தெலசால் அருட்சகோதரர்கள்
இந்திய மறைப்பணித்தளம்

## சிந்தனை தொகுப்பாளர் உரை

அன்புள்ள லசாலியர்களே! ஒவ்வொரு நாளும், நான் வாசிக்கின்ற விவிலிய வாசகங்கள் நம்மை சமூக சிந்தனை உடைய, பொறுப்பான ஆசிரியர்களாக மாற்றுவதற்கு உதவியாக இருக்கும். இந்த நோக்கத்தோடு தான் இந்த செப்டம்பர் மாதத்தின் விவிலிய சிந்தனைகள் அமைகின்றன.

அருட்சகோ. **ஆரோக்கியதாஸ்** FSC




லசாலிய அழைப்பு
என்பது வகுப்பறையே
ஆலயமாக,
மேஜையே பலிப்பீடமாக
ஆசிரியரே
பலிப்பொருளாகக்
கொண்டு
இளைஞர்களுக்கு
அறிவையும்,
ஞானத்தையும் அளிக்கும்
ஒரு தியாக வாழ்வு

# லசாலிய இறையழைத்தல்

## கல்விப் பணிக்கு இறைவன் அழைக்கிறார்

## வந்து பாருங்கள்

(யோவான் 1: 39)

தொடர்புக்கு
இறையழைத்தல் இயக்குநர்,
தெலசால் சபை அருட்சகோதரர்கள்,
புனித மிக்கேல் அருள் தென்றல்,
தேனி சாலை, நாகமலை,
மதுரை - 625 019,
தொலைபேசி : 9363518327





# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

மாதத்தின் முதல் நாளில் நம்முடைய தேடலைப் பற்றிய ஒரு எதிர்பார்ப்பை, இயேசு நமக்கு வழங்குகின்றார். நம்முடைய தேடல் அகலமாக மட்டும இல்லாமல், இந்த பரந்து விரிந்த பூமியில் ஆழமாக இருத்தல் வேண்டும் என்பது இன்றைய விவிலிய வாக்கு. "தேடல் என்பது உள்ளவரை வாழ்வில் ருசி இருக்கும்." அந்தத் தேடலே ஆழமாக மாறும் பொழுது ருசியின் ஆழத்தையும் நாம் அனுபவிப்போம்.

இன்றைய புனிதர் கைல்ஸ் வித்தியாசமான ஒரு தேடலை நமக்கு அறிமுகப்படுத்தகிறார். ஏதென்ஸ் நகரத்தில் இவர் தேடிச் சென்றவர்களெல்லாம் ஏழைகள், மருத்துவ உதவி தேவைப்படுகிறவர்கள், ஊனமுற்றவர்கள், தொழு நோயால் பாதிக்கப்பட்டவர்கள்... என்ன ஒரு தேடல் இது! பொன்னையும், பொருளையும் மரியாதையையும், மகிமையையும் தேடிச் செல்கின்ற இந்த உலகத்தில் "ஒதுக்கப்பட்டவர்களை" தேடிச் செல்வது ஒரு வித்தியாசமான தேடல்.

லசாலிய தேடலும் இந்தப் புனிதரைப் போன்ற தேடல்தான். கல்வி மறுக்கப்படுகின்ற மாணவர்களையும், சமூகத்தால் ஒடுக்கப்பட்ட மக்களையும், உரிமைகள் பாதிக்கப்படுகின்ற குழந்தைகளையும், வாய்ப்புகள் இல்லாமல் வாழும் பெண்களையும், தேடிச் செல்வது தான் லசாலிய கல்வி இயக்கம் நாம் பணிபுரிகின்ற இடத்தில் நம்முடைய பணியின் மகத்துவம், இப்படிப்பட்டோரை தேடுவதில் தான் உள்ளது. இந்த மகிமையை நினைத்து நம் பணியின் மகத்துவத்தை உணருவோம், மகிழ்ச்சி அடைவோம்.

முதல் வாசகம்
1 கொரி 3:18-23

பதிலுரைப்பாடல்
திபா. 24:1-2,3-4,5-6

நற்செய்தி
லூக்கா 5:1-11

புனித
அல்போன்ஸ்
லிகோரி

செப்டம்பர் 2022

**01**

வியாழக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **ஆரோக்கியதாஸ்** FSC



### தெலசாலின் பொன்மொழி

ஒரு சகோதரன் வகுப்பறைக்கு செல்லும்முன், அவனது துறவு மடத்திலேயே அதற்கான முழுமையான பயிற்சியை பெற்றிருக்க வேண்டும். அவன் மாணர்வகளை கையாளும் முறை, அவன் முப்பது வருட அனுபவம் பெற்றதுபோல இருக்கவேண்டும்.
(The Conduct)

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS - INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

புதீயதா, பழையதா என்ற பட்டிமன்ற தலைப்போடு இன்றைய விவிலிய வாசகம் நம்மோடு பயணிக்கிறது. பழையதை பழையதோடு தான் சேர்க்க வேண்டும், புதியதை புதியதோடு தான் சேர்க்க வேண்டும். எண்ணங்களிலும், செயல்களிலும் ஏற்படும் போராட்டத்திற்கு இன்றைய நற்செய்தி முற்றுப்புள்ளி வைக்கிறது. நம்முடைய கொள்கைகள், எண்ணங்கள், திட்டங்கள் செயல்பாடுகள், மீளபார்வைசெய்யும் விதம் அனைத்தும் புதிய தடங்களில் இன்றைய காலச் சூழலுக்கு ஏற்றாற்போல் இருக்கவேண்டும், என்பது இன்றைய விவிலிய வாசகத்தின் அறிவுரை.

இன்றைய புனிதர் வில்லியம் புதியவழிமுறைகளை திருச்சபைக்கு வழங்குகின்றார். அரசர்கள் ஆட்சிபுரிந்த திருச்சபையை இறைவன் மட்டும்தான் ஆட்சி புரிய முடியும் என்ற புதிய கொள்கையோடு அக்காலத்தில் வலம் வந்தவர் இன்றைய புனிதர் வில்லியம். திரு அருட்சாதனங்களைப் பெறுவதற்க நாம் அருள்நிலையில் இருக்கவேண்டும். அந்த அருள்நிலையை இறைவனால் மட்டும் தான் வழங்கமுடியும். இந்த பூமியில் உள்ள அரசர்களால் வழங்க இயலாது, என்ற இன்றைய சூழலில் இந்த புதிய கொள்கையை வலியுறுத்துகின்றார்.

லசாலிய அன்பர்காளகிய நாம் புதிய வழிமுறைகளை, நம்முடைய கல்விபோதனை முறையில் புகுத்துவது நம்முடைய கடமையாக கருதவேண்டும். பழைய பல்லவிகளைப் பாடுவது இன்றைய கல்விச் சூழலுக்கு ஏற்புடையதல்ல. இன்றைய மாணவர்கள் வித்தியாசமான ஆசிரியர்களாகிய நாம் பார்த்திராத ஒரு புதிய உலகத்திலிருந்து வருகின்றனர். இந்தப் புதிய மாணவர்களுக்கு, புதிய கல்வி கற்பிக்கும் முறைகளும், புதிய மதிப்பீடும் செய்யும் முறைகளும் தேவைப்படுகின்றன. நம்முடைய பழைய எண்ணங்களை அல்லது முறைகளை இந்தப் புதிய மாணவ சமுதாயத்தோடு, ஒத்துப்போகவைப்பது ஏற்புடையதல்ல. எனவே நம்மையே இக்காலக் கல்விக் சூழலுக்கு ஏற்றாற் போல் மாற்றிய புதிய லசாலிய அன்பர்களாக மாறுவோம்.

முதல் வாசகம்
1 கொரி 4:1-5

பதிலுரைப்பாடல்
திபா. 37:3-4,5-6,27-28,39-40

நற்செய்தி
லூக்கா 5:33-39

**புனித வில்லியம்**

லசாலிய புனிதர்
புனித சாலமோன்

செப்டம்பர் 2022
**02**
வெள்ளிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **ஆரோக்கியதாஸ்** FSC

### தெலசாலின் பொன்மொழி

நீங்கள் உங்கள் மாணவர்களுக்கு விசுவாசத்தை பற்றி உண்மையையும், மத கோட்பாட்டின் படி அவர்களை வழிநடத்தவும் கடமைப்பட்டுள்ளீர்கள். இவற்றை செய்ய நீங்கள் உங்களையே திருநிலைப்படுத்தி கொள்ளுங்கள். தேவையானால், உங்கள் வாழக்கையை கொடுங்கள். இத்தகைய தாராள மனப்பான்மையை நீங்கள் கொண்டுள்ளீர்கள். (MSF)

# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை





## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
1 கொரி 4:6-15

பதிலுரைப்பாடல்
திபா. 145:17-18,19-20,21

நற்செய்தி
லூக்கா 6:1-5

புனித வால்தோஃப்

செப்டம்பர் 2022

**03**

சனிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **ஆரோக்கியதாஸ்** FSC

மனித மாண்பை காப்பது சட்டங்களா? மனிதமா? என்ற கேள்வியோடு இன்றைய விவிலிய வாசகம் நமக்கு சவால் விடுக்கிறது. சட்டங்களுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்து அந்தக் காலக்கட்டத்தில் இயேசு சட்டங்கள் அல்ல, "மனிதம் தான் முக்கியம்" என்று சொல்வது பிரச்சனைக்குரிய ஒரு காரியமாக மாறியது. மனிதத்தை மறந்த ஒரு சமூகத்திற்கு இது ஒரு சவாலாக அமைந்தது, போராட்டமாக மாறியது, போர்க்களமாக உருவாகியது. இறுதியில் மனிதம் வென்றது சட்டங்களும் சம்பிரதாயங்களும் தோற்றுப் போயின.

இன்றைய புனிதர் போப் கிரகோரி ஒரு மறைவல்லுனர் திருச்சபையானது சட்டங்களுக்காக ஏற்படுத்தப்படவில்லை. மனிதர்களுக்காக உருவாக்கப்பட்டது என்று சொல்ல தயங்கவில்லை. மனிதர்கள் பசியோடு செத்துமடியும் பொழுது சட்டங்கள் காப்பாற்றுவது இல்லை. ஆனால் மனிதம் காப்பாற்றும். எந்த ஒரு சட்டம் மனிதநேயத்தை மறுக்கின்றதோ, மனிதமாண்பை கொடுமைப்படுத்துகின்றதோ, மனித வாழ்வு மேம்பட தடையாக உள்ளதோ அந்த சட்டங்கள் அனைத்தும் துக்கியெறியப்பட வேண்டும் என்பது இன்றைய புனிதரின் கருத்து.

லசாலிய நண்பர்களாகிய நாம் மாணவர்களின் நலனுக்காக, உருவாக்கப்படும் சட்டங்களும், விதிமுறைகளும் அந்த மாணவர்களின் மாண்பையும், மதிப்பையும், காப்பாற்றக் கூடியதாக உள்ளதா என்று எண்ணிப் பார்க்க வேண்டிய நாள் இது. நாம் எடுக்கின்ற முயற்சிகள் தேவையில் உள்ளவரை தேடுதலுக்காகவும், ஏழைகளின் மேல் இரக்கப்படுவதற்காகவும், படிக்க இயலாதவர்க்கு உதவி செய்யக்கூடியதாகவும் இருக்க வேண்டும் என்பது தெலசாலின் வேண்டுகோள். எனவே நாம் பள்ளியிலும், பணிபுரிகின்ற இடங்களிலும், நாம் செய்யும் செயல்கள் இயற்றும் விதிமுறைகளும் மனித மாண்பை காப்பதாக இருக்கட்டும்.



### தெலசாலின் பொன்மொழி

நீங்கள் பெற்றுள்ள அருளுக்கேற்ற பயனை திருச்சபைக்கு வழங்க உங்களை தயார்செய்து கொள்ளுங்கள்
(MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
சா.ஞா 9:13-18

இரண்டாம் வாசகம்
பிலமோன் 9:10, 12-17

நற்செய்தி
லூக்கா 14:25-33

பொதுக்காலம்
23-ம்
ஞாயிறு

செப்டம்பர் 2022

**04**

ஞாயிற்றுக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஆரோக்கியதாஸ் FSC

தன்னைப் பின்செல்வதற்கு, ஒரு புதிய பாதையை ஒரு புதிய சித்தாந்தத்தை இயேசுவகுத்துக் கொடுக்கிறார். இன்றைய விவிலிய வாசகத்தில், சிலுவையை சுமந்துகொண்டு தன்னை பின் தொடருமாறு அறிவுறுத்துகிறார். சுகமான வாழ்க்கையை நான் தருவேன் என்று இயேசு ஒருபோதும் சொல்லவில்லை. எனவே என்னைப் பின் தொடர்வதற்குமுன் நன்றாக யோசித்துவிட்டு அதன்பின் என் பின்னேவாருங்கள் என்று முழங்குகின்றார்.

பலபாதைகள் ஒன்றாக சந்தித்தது நான் அவற்றை சங்கமித்து நின்று கொண்டிருந்தேன். எதை தேர்ந்தெடுப்பது, எதை விடுவது என்ற மனக் கணக்கில் குழம்பிப் போயிருந்தேன். சிறிதுநேரம் சிந்தித்துவிட்டு, ஒரு சிலர் மட்டுமே பயணம் செய்து வந்த பாதையை நான் தேர்வு செய்தேன். அது எனக்கு மிகுந்த ஆச்சர்யங்களையும், நல்ல அனுபவங்களையும் வாரி வழங்கியது. நான் தேர்ந்தெடுத்த இந்த புதிய பாதையானது எனக்கு நிறைந்த மகிழ்ச்சியை அளித்தது.

லசாலிய குடும்பத்தைச் சேர்ந்த நாம் பலவிதமான புதுப்புது வழிமுறைகளை தேடிக் கொண்டே இருப்பது நமக்கும் நம்முடைய மாணவர்களுக்கும் ஒரு அருமையான பயணமாக இருக்கும். இந்த புதிய பாதைகள், சிலுவைகள் நிறைந்த பாதைகள்தான். ஆனால் வெற்றியின் பாதைகள் புனிதமான பாதைகள், மகத்துவத்தையும், மாண்பையும், மனிதத்தையும் போற்றக்கூடிய பாதைகள் இவை கரடுமுரடாக இருந்தாலும் நம்முடைய லசாலிய லட்சியப் பயணம் இலக்கை அடைய தூண்டகோளாகவும், வழிகாட்டுதலாகவும் அமையும் என்ற விசுவாசத்தோடு நம்முடைய லசாலியப் பயணம் தொடரட்டும்.

**தெலசாலின் பொன்மொழி**

தனியாக இருப்பவர்கள் கடவுளின் அன்பினால் நிரப்பப்படுள்ளார்கள், அதை பிறருடன் பகிர்ந்துகொள்ள ஆர்வமாக இருப்பார்கள். (MSF)





# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

பல முக்கிய விழாக்களை உள்ளடக்கியது இன்றைய நாள் அந்த விதத்தில் இது ஒரு புனிதமான நாள். இந்தியாவில் ஆசிரியர் தினமாக கொண்டாடும் இந்நாள் பேறுபெற்ற நாளாகும். ஒரு மனிதன் தன் வாழ்வில் பல ஆசிரியர்களைச் சந்திக்கிறான். இந்த ஆசிரியர்கள் பள்ளியில் மட்டும் காண்பவர்கள் அல்ல. நம்முடைய வழிமுறைகளை, வாழ்க்கை முறைகளை செம்மைப்படுத்தும் ஒவ்வொருவரும் ஆசிரியர்களே! அந்தவிதத்தில் நம்முடைய முதல் ஆசிரியர்கள் நம்முடைய பெற்றோர்களே, அவர்கள்தான் நாம் இந்த உலகில் நடமாட கற்றுக் கொடுத்தவர்கள். இரண்டாவதாக பாடசாலைகளில் நமக்கு கற்றக் கொடுத்தவர்கள். இவர்கள் பலர் நம் வாழ்வில் வந்திருந்தாலும் ஒருசிலரையே இன்றும் நாம் நினைத்துப் பார்ப்பது ஒரு ஆசீர்வாதம் மிக்க நற்செயல். மூன்றாவதாக இந்த சமூகத்தில், நம்முடைய உறவினர்கள், நண்பர்கள், நம்முடைய தேவைகளை பூர்த்தி செய்யக்கூடியவர்கள் என்று பலரை நாம் நம்முடைய சமூக ஆசிரியர்களாக எடுத்துக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். எனவே பள்ளி என்ற கல்விச் சூழலைத் தாண்டிவளரும் ஒவ்வொரு நாளும் நமக்கு ஏதாவது ஒன்றை அவர்கள் கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஆசிரியர்கள் அனைவருக்கும் இன்றைய ஆசிரியர் தினத்தில் பாதம் தொட்டு தலை வணங்கி மரியாதை செலுத்துவோம்.

இன்றைய புனிதரும் ஒருமிகப்பெரிய ஆசிரியரே, அன்பையும், மனிதமாண்பையும் வீதியில் தூக்கியெறியப்பட்டவர்களிடம் காட்டிய ஒரு மிகப்பெரிய புனிதர் அன்னை திரேஸா, அன்பு என்ற பாட சாலையில் பணி என்ற பாடத்தை தன்னுடைய செயல்பாடுகளினால் தத்துவமாக இல்லாமல் செயலாக்கங்களுடன் கற்றுக் கொடுத்தவர் இந்த புனிதர். பசித்தோரையும், நோய்வாய்ப்பட்டவரையும் ஆடையில்லாமல் இருந்தோரையும், வயதான முதியோர்களையும், ஊனமுற்றோர்களையும் தன்னுடைய மாணவர்களாக ஏற்றுக்கொண்டு "பாசம்" என்ற ஒரே பாடத்திட்டத்தை வைத்து கல்வி புகட்டியவர் அன்னை திரேஸா லசாலியனாகிய நாமும் பாடத்திட்டங்களுக்கு அப்பாற்பட்ட நல் ஆசிரியர்களாக மாறுவோம்.

முதல் வாசகம்
1 கொரி 5:1-8

பதிலுரைப்பாடல்
திபா. 5:4-6, 11

நற்செய்தி
லூக்கா 6:6-11

புனித அன்னை தெரசா

செப்டம்பர் 2022

**05**

திங்கள்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **ஆரோக்கியதாஸ்** FSC



### தெலசாலின் பொன்மொழி

என் அன்பு சகோதரரே, நீங்கள் கண்டிப்பாக உங்களையே கடவுளின் வெகுமதியிடம் ஒப்படைக்க வேண்டும். (கடிதம் 19)

# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை





முதல் வாசகம்
1 கொரி 6:1-11

பதிலுரைப்பாடல்
திபா. 149:1-6,9

நற்செய்தி
லூக்கா 6:12-19

புனித
எலியுத் தேரியஸ்

செப்டம்பர் 2022
**06**
செவ்வாய்க்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **ஆரோக்கியதாஸ்** FSC

## சிந்தனைத் துளிகள்

எப்படிப்பட்ட தலைவர்கள் நமக்கு வேண்டும்? அவர்களை எவ்வாறு தேர்ந்தெடுக்க வேண்டும்? என்ற வினாக்களுக்கு, பதிலளிப்பதாக உள்ளதுதான் இன்றைய விவிலிய வாசகம். நாம் எல்லோருமே அழைக்கப்பட்டவர்கள் தான். ஆனால் ஒரு சிலர் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக, அலங்கரிக்கப்படுகின்றனர். அந்த அலங்காரங்கள் எளிதாக வருவது கிடையாது. நீண்ட இறை தலைவர்களுக்கு பணிசெய்யும் கடமையைத் தவிர வேறு கடமைகள் இல்லை. பணியின் மூலமாகத்தான் வழி நடத்த வேண்டுமே தவிர தலைமை நிர்வாகத்தால் அல்ல. அந்த பணியில் மக்களின் "துயர் துடைத்தல்" ஒரு முக்கிய பங்கினை வகுக்கிறது.

இன்றைய புனிதரும் இப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மனிதரே. அவருக்கும் பல திறமைகள் வழங்கப்பட்டு இருந்தன. அவற்றில் ஒன்று அசுத்த ஆவிகளை விரட்டுவது, அவ்வாறு செய்வதன்மூலம் தன்னுடைய இறைத் தன்மையை அவர் வெளிக்கொணர்வதற்கு "இறைஅருள்" அவரோடு இருந்தது. இப்பேர்ப்பட்ட தலைமைத்துவமும், நீண்ட இறைவேண்டுதலுக்குப் பின்னர் கிடைத்ததே. இறந்துப் போன ஒரு மனிதரை உயிர்ப்பித்ததாக வரலாற்று ஏடுகள் இன்றைய புனிதரைப் பற்றி போற்றுகின்றன. எனவே இறைவேண்டுதலும் தலைமைத்துவ பணிகளும் இரண்டு தண்டவாளங்கள் போன்றவை. எதிலிருந்து எதையும் பிரிக்க முடியாது. இரண்டையும் சேர்த்தே கொண்டு செல்வதுதான் பணியின் மகத்துவத்தை புரிய வைக்கும்.

லசாலிய தோழர்களாகிய நாம் அழைக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். இப்பொழுது நம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருக்க கூடிய குழந்தைகளும், அவர்களைச் சார்ந்த பணியும் இறைவனால் வழங்கப்பட்டது. அந்த நம்பிக்கை நமக்கு வேண்டும் அதுதான் நம்மை பலப்படுத்தும். நம்முடைய பணியின் பலனை முழுவதுமாக அனுபவிக்க இறைவேண்டலையும், நம் கடமைகளையும் ஒன்றுசேர எடுத்துச்செல்லும்.

### தெலசாலின் பொன்மொழி

புனித பவுல் உரைத்தவற்றை சிந்திப்போம்,
"கடவுள் திருச்சபையை திருதூதர்கள் இறைவாக்கினர்கள் மற்றும் ஆசிரியர்கள் என விரிவுபடுத்தியுள்ளார்". கடவுள் உங்களையும் தன் பணியில் இணைத்துள்ளார் என்பதில் நீங்கள் உறுதியாக இருக்கவேண்டும். (MSF)





# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
1 கொரி 7:25-31

பதிலுரைப்பாடல்
திபா. 45:10-16

நற்செய்தி
லூக் 6:20-26

அருளாளர்
ஓசானாம்

செப்டம்பர் 2022

**07**


புதன்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஆரோக்கியதாஸ் FSC

கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களையும் விவிலியத்தை வாசிக்க வைத்தது. இன்றைய நற்செய்தி வாசகம். காந்தியடிகள், டால்ஸ்டாய் போன்ற மிகப்பெரிய எழுத்தாளர்களையும், பிறமத தலைவர்களையும் வியக்கச் செய்துள்ளது. இன்றைய மழைப்பொழிவு வாசகம். ஏழைகளையும், போராடுபவர்களையும் சிறையில் இருப்பவர்களையும் அநியாயமாக தண்டிக்கப்பட்டவர்களையும் போற்றுகின்றது இன்றைய "மழைப் பொழிவு" வாசகம், இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட நான் இப்படிப்பட்டவர்களை காணும்பொழுது; அவர்களைப் பேறு பெற்றவர்களாக கருத வேண்டும் என்பது இன்றைய வாசகம் நமக்கு கொடுக்கும் சவால், உலகம் பார்க்கின்றவிதம் வேறு, இறைவன் பார்க்கின்ற விதம் வேறு என்பதை இன்றைய நற்செய்தி புலப்படுத்துகிறது.

இன்றைய புரிதலும், பேறு பெற்றவரே ரெஜினா என்ற இவர் தன்னுடைய கிறிஸ்தவ கோட்பாடுகளை விட்டுக் கொடுக்க தயாராக இல்லை. திருமணம் செய்து கொள்வதற்காக தான் விசுவாசித்த கடவுளை மறுதலிக்கவும் தயாராக இல்லை. அதற்காக தன்னுடைய உயிரைத் துறக்க தயாரானார். ஒரு சாதாரண ஆளுமைக்கும் சிறுமியாக இருந்து மழைப் பொழிவினால் விசுவாசத்தை ஆழப்படுத்தி அதே விசுவாசத்திற்காக தன் தலை வெட்டுப்பட ஏற்றுக்கொண்ட இந்தப் புனிதர் மாபெரும் புனிதையே!

லசாலிய வழித்தோன்றல்களாகிய நாம் ஏழைகளும் புறக்கணிக்கப்பட்டவர்களும், பசித்தவர்களும், நீதி மறுக்கப்பட்டவர்களும், அழுகையும், புலம்பலும் கொண்டு சிறைப்பட்டவர்களும் நம்மிடம் வருகின்றனர். இவர்களெல்லாம் இறைவன் முன் பேறுபெற்றவர்களே! இவர்களை ஏற்றுக் கொண்டு, இவர்களுக்கு கல்வி கற்றுக் கொடுக்கும் நம் பணியும் பேறு பெற்றதே!.



### தெலசாலின் பொன்மொழி

உங்களுக்கு கடவுள் தந்துள்ள அருளைப்பற்றி சந்தேகப்படக்கூடாது. உங்கள் மாணவர்களை வழிநடத்தவும், அவர்களுக்கு நற்செய்தியை அறிவிக்கவும், மத கோட்பாட்டில் வளர்க்கவும் அது உங்களுக்கு தரப்பட்டுள்ளது. (MSF)

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS-INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
மீக்கா 5:2-5

பதிலுரைப்பாடல்
திபா: 13:5,6

நற்செய்தி
மத்தேயு : 1:1-16; 18-23

புனித கன்னி மரியாவினுடைய பிறப்பு

செப்டம்பர் 2022

**08**

வியாழக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஆரோக்கியதாஸ் FSC

மரியா – சிறப்பு பெற்ற பிறப்பு

"தோன்றின் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று" – குறள் : 236

அன்னை மரியாவுக்கும் இக்குறள் சிறப்பாகப் பொருந்துகிறது. ஏழ்மையான குடும்பத்தில் பிறந்து சாதாரண பெண்ணாக வளர்ந்தவர் அன்னை. ஆனால் அவரின் பிறப்பு இன்று நம் அனைவராலும் கொண்டாடப்படுகிறது. அதற்குக் காரணம் அவரின் தூய வாழ்வு – தியாகவாழ்வு – இறைவார்த்தைக்கு கீழ்படிந்த வாழ்வு. "பேச்சுமட்டும் தான் வாழ்க்கையில் ஒன்றும் கடைபிடிக்கிறதில்லை " என்பது போல வாய்ச்சொல் வீரர்களாய் வாழும் மக்கள் நடுவில் தான் சொன்ன "ஆகட்டும்" என்ற வார்த்தைக்காக வாழ்வு முழுவதும் அர்ப்பணித்து வாழ்ந்தார் அன்னை மரியா. கன்னியாக இருந்து தாயானார். இறைவனின் அன்னையாக இருந்தும் பிள்ளையைக் காக்க எகிப்துக்கு ஓடினார், கணவனை இழந்தார், பெற்ற பிள்ளையை பறிகொடுத்தார். தனிமையில் வாழ்ந்தார். எத்தனையோ தியாகங்கள் செய்து தனது "ஆகட்டும்" என்ற வார்த்தைக்கு உயிர் கொடுத்துக் கொண்டே இருந்தார். ஆகையால் உடலோடும் ஆன்மாவோடும் விண்ணகம் சென்றார். இன்று அனைவரின் மனதிலும் அன்பு நிறைந்த தாயாகத் தோன்றுகிறார். அன்னை மரியாவைப் போன்று மக்கள் மனதில் புகழோடு தோன்ற சொன்ன சொல்லைக் காப்பாற்ற வேண்டும். வார்த்தையான இறைவனைதன் உதரத்தில் தாங்கிய அன்னை தன் வார்த்தையின்படி வாழ்ந்து காட்டினார். இவரின் சிறப்புமிகுந்த பிறப்பு நம்மையும் இறைவார்த்தையின்படி வாழ அழைக்கிறது வாழ்ந்து காட்டுவோம்.



### தெலசாலின் பொன்மொழி

மரியாளின் பிறப்பு : அன்னை மரியாளிடம் இறைவார்த்தையின் உறைவிடமாக மாறுவதற்கு தேவையான அருளை பெறுவதற்கு வேண்டுங்கள். (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

சீடர்களுக்கான மகத்துவம் என்னவெனில் அவர்கள் தங்களுடைய குருக்களை முன் உதாரணமாக எடுத்துக் கொள்வதுதான். அப்படியெனில் ஒரு குரு எவ்வாறெல்லாம் இருக்க வேண்டும், எப்படியெல்லாம் வழிகாட்ட வேண்டும் என்ற வினாக்களுக்களுக்கு பதிலளிப்பது இன்றைய நற்செய்திவாசகம். ஒரு குரு சமூக மற்றும் ஆன்மீக குருடனாக இருக்க கூடாது, அடுத்தவர்களை குறைசொல்லக் கூடியவர்களாகவும் இருக்கக்கூடாது. அதேநேரத்தில் சீடர்களும் குருவின் முன் உதாரணங்களை ஏற்றுக் கொள்ளவேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றனர்.

இன்றைய புனிதரும் இதற்கு ஒரு அற்புதமான எடுத்துக்காட்டு தன்னுடைய தலைவன் எவ்வாறெல்லாம் அடிமைகளுக்காகவும், உரிமைகளுக்காகவும், போராடினாரோ அதேபோல் இன்றைய புனிதரும் போராடுகின்றார். அடிமைகளின் பாதுகாவலராகிய இவர் ஆப்பிரிக்க - அமெரிக்கர்களின் உரிமைகளுக்காக போராடிய ஒரு சமூகப் போராளி. 40 ஆண்டுகளாக இந்தப் போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்தவர் புனித பீட்டர் கிளாவர்.

லசாலிய தொண்டர்களாகிய நாம் பலவிதமான அடிமைத்தனத்தில் சிக்கி இருக்கக்கூடிய குழந்தைகளை ஒவ்வொரு நாளும் சந்திக்கின்றோம். அவர்களை அந்தந்த அடிமைத்தனத்திலிருந்து மீட்டெடுப்பதற்கு முன் நம்மிடம் அப்பேற்பட்ட அடிமைத்தனங்கள் குறைபாடுகள் இல்லாமல் காத்துக் கொள்ள வேண்டும்.

முதல் வாசகம்
1 கொரி 9:16-19, 22-27

பதிலுரைப்பாடல்
திபா. 84:2-5,11

நற்செய்தி
லூக்கா 6:39-42

புனித பீட்டர் கிளாவர்

செப்டம்பர் 2022

**09**

வெள்ளிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஆரோக்கியதாஸ் FSC



**தெலசாலின் பொன்மொழி**

உங்கள் முழு மனதுடன் உங்கள் பணியை செய்யுங்கள், கடவுளுக்காக உங்கள் பணியை அர்ப்பணியுங்கள். (MSF)

COMMUNICATION COMMISSION ★ DE LA SALLE BROTHERS -INDIA ★



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனைகள்

"தாயைப்போல பிள்ளை நூலைப் போலசேலை"

அரசன் எவ்வழியோமக்கள் அவ்வழி; இப்படிப்பட்ட பழமொழிகள் ஒரு மனிதனின் பண்புகள் எவ்வாறு உருவாக்கப்படுகின்றன என்பதை தெளிவுபடுத்துகின்றன. அவர் வாழ்கின்ற சமூக பொருளாதார அரசியல் சூழலில் ஒரு மனிதனின் எண்ணங்களும், ஈடுபாடுகளும், நடைமுறைப் பழக்கவழக்கங்களும், மாற்றம் பெருகின்றன. இந்த மாற்றம் நல்லவையாக இருக்கவேண்டும் என்றால் ஆசிரியர்களாகிய நாம் நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கு, முன்மாதிரியாக இருக்கவேண்டும் என்பதே இன்றைய சவால். நாம் நல்லகனிகளைக் கொடுக்கக்கூடிய நல்லமரமாக இருந்தால் நம்மைப் பார்க்கின்ற நம்மிடம் படிக்கின்ற குழந்தைகளும் அந்தப் பழக்கவழக்கங்களைக் கற்றக்கொண்டு அவர்களும் நல்லகனிதரும் மரங்களாக மாறுவார்கள். ஒரு குழந்தை நாம் சொல்வதை செய்வதைவிட நாம் என்ன செய்கின்றோமோ அதையே செய்யும். எனவேதான் குழந்தைகள் "கெட்டவைகளை" பேசுவதில்லை மாறாக "கேட்ட வார்த்தைகளைப்" பேசுகிறார்கள். எனவே ஆசிரியர்களாகிய நாம் நல்ல குழந்தைகளை உருவாக்கக்கூடிய கனி தரும் ஆசிரியர்களாக மாறுவோம்.

முதல் வாசகம்
1 கொரி 10:14-22

பதிலுரைப்பாடல்
தி.பா. 116:12-13, 17-18

நற்செய்தி
லூக்கா 6:43-49

புனித நிக்கோலஸ்

செப்டம்பர் 2022

**10**

சனிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **ஆரோக்கியதாஸ்** FSC



### தெலசாலின் பொன்மொழி

ஒருவரை கடவுளிடம் நம்பிக்கைகொள்ளசெய்ய, ஒவ்வொருவருடன் எவ்வாறு பேச வேண்டும் என்பதை பற்றி நாம் அறிந்து கொள்ள வேண்டும். (MSF)

# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை





முதல் வாசகம்
வி.ப 32:7-11,13-14

இரண்டாம் வாசகம்
1 திமொத்தேயு 1:12-17

நற்செய்தி
லூக்கா 15:1-32

பொதுக்காலம் 24-ம் ஞாயிறு

செப்டம்பர் 2022

**11**

ஞாயிற்றுக்கிழமை

## சிந்தனைத் துளிகள்

தொலைந்து போன மாணவச் செல்வங்களை, நாம் தேடவேண்டும் என்ற வாஞ்சையே இன்றைய நற்செய்தி வாசகம் நம்மைச் சிந்திக்க செய்கிறது. தொலைந்து போன சமூகச் சூழலால்; நட்பு வட்டாரத்தால், பொருளாதார நெருக்கடியால் பல குழந்தைகள் தொலைந்து போகவேண்டிய வருந்தத்தக்க சூழல் இன்று நிலவுகிறது. இவர்களுக்கெல்லாம் அடைக்கலம் தரும் பூங்காவனமாக இருப்பது நம்முடைய லசாலியப் பள்ளிகள். அதில் பணிபுரியும் நீங்கள் ஒரு மாணவனை வரவழைத்து கற்பித்து அவன் இதயத்தை உங்களது அன்பால் தொட்டு அவன் வாழ்க்கையையே மாற்றக் கூடிய ஒரு தெய்வீகச் சக்தியை பெற்றவர்களாக லசாலிய ஆசிரியர்களாகிய நீங்கள் இருக்கிறீர்கள். எனவே பள்ளி என்ற நான்கு சுவரைத் தாண்டி இந்த சமூகத்தில் தொலைந்து போன மாணாக்கர்களை தேடுவோம் கல்விபுகட்டுவோம் மகிழ்ச்சியானமாற்றத்தை உருவாக்குவோம்.



### தெலசாலின் பொன்மொழி

இறைபோதனை வகுப்புகள் நீண்ட நேரம் நடக்கும்போது, ஆசிரியர்கள் மாணவர்களுக்கு விருப்பம் என பொய்சொல்லி அவர்களின் கவனத்தை சிதறவிடாமல் செய்யவேண்டும்.
(The Conduct)

சிந்தனை
அருட்சகோ. ஆரோக்கியதாஸ் FSC



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

ஒரு லசாலிய ஆசிரியரது நல்லவார்த்தைகள், நயமான வார்த்தைகள், நம்பிக்கை தரும் வார்த்தைகள் மாணவர்களின் வலிகளைப் போக்கும் நல் மருந்தாக அமையும். இந்த வழிகள் பல வகையானவை. ஆனால் அவை அனைத்திற்கும் ஒரு லசாலிய ஆசிரியரிடம் இருந்து வரும் நம்பிக்கையூட்டும் வார்த்தைகள் நம் மாணவனின் எப்பேர்ப்பட்ட வலிகளைப் போக்கும், அவனுக்கு மன அமைதியைத் தரும் மன்னிப்பை வழங்கும் அச்சத்தைப் போக்கும் உடன் உள்ள நலனைப் பெற்று தரும், தைரியத்தை வரவழைக்கும், முன்னேற்றத்திற்கான வழிகளை வகுக்கும். அன்பைப் பகிர்ந்து வரவுகளை விரிவாக்கும். இவ்வளவு வலிமை வாய்ந்தது ஒரு லசாலிய ஆசிரியரின் வார்த்தைகள். சரியான நேரத்தில், சொல்லப்படும் சரியான வார்த்தைகள் அம்மாணவனின் வாழ்க்கை மாற்றத்திற்கு வழிவகுக்கும்.

அதேபோல் நாம் பயன்படுத்தும் "எதிர்மறைவார்த்தைகள்" தவறான தாக்கங்களை ஏற்படுத்தும் என்ற எச்சரிக்கையோடு இயேசுவின் வார்த்தைகளாக நம் வார்த்தைகளும் மாறட்டும் என்று ஜெபிப்போம்.

"எனது வார்த்தை பிறரை வாழவைக்கவே".

முதல் வாசகம்
1 கொரி 11:17-26

பதிலுரைப்பாடல்
திபா. 40:6-9,16

நற்செய்தி
லூக்கா 7:1-10

மாியாவின் திருப்பெயர்

செப்டம்பர் 2022

**12**

திங்கள்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **ஆரோக்கியதாஸ்** FSC



**தெலசாலின் பொன்மொழி**

ஒரு மாணவனுக்கு விடைதெரியாதபோது மற்றமாணவர்களை பரிகசிக்க ஆசிரியர் அனுமதிக்கக்கூடாது. (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

புதிய வாழ்வை வாழ்வதற்காகவும் அழைக்கப்பட்டு இருக்கின்றோம். இன்றைய வாசகமானது, இறந்துபோன இளைஞனுக்கு உயிர் கொடுக்கும் நற்செய்தியை நமக்கு அறிவிக்கிறது. துயரப்படுவோரிடம் அழவேண்டாம் என்கிறார் இயேசு. ஏனெனில் அவர் நம்மோடு இருக்கின்றார். நம்முடைய இழப்புகளை, வெற்றிகளாக மாற்றிக் கொடுப்பவர் நம்முடைய தெய்வம் இயேசு. இதேபோலத்தான் லசாலிய ஆசிரியர்களாகிய நாம் பலவிதங்களில் இறந்துபோன மாணவர்களுக்கு, வாழ்வை வழங்க உயிரை மீட்டுக் கொடுக்க அழைக்கப்பட்டிருக்கின்றோம். நம்முடைய ஈடுபாடுகள் நம் மாணவர்களின் வாழ்க்கையை வளப்படுத்துவதாக இருக்கவேண்டும். எப்படிப்பட்ட இழப்பையும் மீட்டுக் கொடுக்கக்கூடிய வல்லமை ஒரு லசாலிய ஆசிரியருக்கு உண்டு. எனவே நம் பணியில் மேன்மைத்துவத்தை உணர்ந்தவர்களாய், வாழ்வைக் கொடுக்கும் வல்லதேவனின் வாரிசுகளாக நம் பள்ளியில் வலம் வருவோம்.

முதல் வாசகம்
1 கொரி 12:12-14,27-31

பதிலுரைப்பாடல்
திபா. 100:1-5

நற்செய்தி
லூக்கா 7:11-17

புனித ஜான் கிறிஸ்தோம்

செப்டம்பர் 2022
**13**
செவ்வாய்க்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஆரோக்கியதாஸ் FSC



### தெலசாலின் பொன்மொழி

உங்களில் வார்த்தைகள் மாணவர்களில் மாற்றத்தை ஏற்படுத்தட்டும், எடுத்துக்காட்டான வாழ்வால் அவர்களுக்கு நீங்கள் சொல் வேண்டியதை கற்பியுங்கள். (MSF)

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS - INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
எண்ணிக்கை 21:4-9

பதிலுரைப்பாடல்
திபா. 78:1-2,34-38

நற்செய்தி
யோவான் 3:13-17

திருச்சிலுவையின் மாட்சி

செப்டம்பர் 2022
**14**
புதன்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஆரோக்கியதாஸ் FSC

வலிகளும், வேதனைகளும் இல்லாமல் வருகின்ற மகிழ்ச்சி, நமக்குரியதல்ல அல்லது நம்மிடம் நிலை நிற்கப் போவதும் இல்லை என்பதை நாம் உணரவேண்டும் எந்த ஒரு வெற்றியும் எளிதாக வருவது கிடையாது. அனைத்திற்கும், கஷ்டப்பட வேண்டும், உழைக்கவேண்டும், உடலைவருத்தவேண்டும். இவைகள் அனைத்தும் வெற்றியை அனுபவிப்பதற்கு மூலக்காரணங்களாக அமையும். இதைத் தான் இன்றைய திருவிழாவும் நமக்கு எடுத்துரைக்கின்றது. இவை இல்லாமல் வெற்றியும் இல்லை உயிர்ப்பும் இல்லை. லசாலிய ஆசிரியர்களாகிய நாம் நமக்கு வரும் சிலுவைகளை சுமக்கக் கற்றுக்கொண்டால். நாமும் நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மாணவர்களும் உயிர்ப்பின் மகிழ்ச்சியை அனுபவிப்போம். நம்முடைய சிலுவைகள் நம்மிடமிருந்தோ, நம் சார்ந்திருக்கும் சமூகத்திடமிருந்தோ வரலாம். அவைகளை அன்பெனும் சக்தியினால் தழுவும் போது அதில் வரும் உயிர்ப்பு என்ற உன்னத மகிமையால் வைகள் மறைந்தோடுகின்றன.

### தெலசாலின் பொன்மொழி

இந்த உலகில் இயேசுவின் சிலுவையும், கள்வர்களின் சிலுவையும் உள்ளன. கள்வர்களின் சிலுவை எத்தகைய அருளையும் பெற்றிருப்பதில்லை. ஏனெனில், அவர்கள் தவறான மனநிலை கொண்டவர்கள். இயேசுவின் சிலுவை புதுமைகள் செய்யக்கூடியது. நீங்கள் சுமப்பது இயேசுவின் சிலுவையா? அல்லது கள்வர்களின் சிலுவையா? (MSF)





# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
எபிரேயர் 5:7-9

பதிலுரைப்பாடல்
திபா. 118:1-2,16-17,28

நற்செய்தி
யோவான் 19:25-27

புனித மரியாவின் துயரங்கள்

செப்டம்பர் 2022

**15**

வியாழக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **ஆரோக்கியதாஸ்** FSC

நேற்று சிலுவைக்கு விழா எடுத்தோம். தொடர்ச்சியாக அன்னைமரியாவின் சிலுவைகளுக்காக விழா எடுக்கின்றோம். இந்த இரண்டு விழாக்களிலும், நாம் தெரிந்து கொள்ள வேண்டியது எந்த ஒரு சிலுவையும், துன்பங்களினாலும், பாவங்களினாலும் விளைந்தவையல்ல. பிறரின் துன்பங்களைத் தீர்க்கவும், அதற்காக ஏற்கப்பட்ட துன்பங்களுமாகிய இந்த இரண்டு சிலுவைகளும் நம்முடைய பணித்தளங்களில் நாம் சந்திக்கும் இன்னல்களும், நமக்கு அர்த்தம் உள்ளவையாக, வாழ்வுக்கு வழிகாட்டுபவைகளாக அமையும். பிறருக்காக சுமக்கும் சுமைகளில் ஒரு அளவில்லா மகிழ்ச்சியுண்டு என்பதை இந்த விழாக்கள் நமக்கு கற்றுத் தருகின்றன பல நேரங்களில் நம் உடலில் ஏற்படும் காயங்களை விட மனதில் ஏற்படும் காயங்களின் வலி அதிகம். இந்தக் காயங்கள் நம்முடைய மாணவர்களுக்காக நம்மோடு பணிபுரிகின்ற ஆசிரியர்களுக்காக, நாம் சார்ந்திருக்கும் சமூகத்திற்காக இருப்பதாக இருந்தால் அதைவிட மகிழ்ச்சி தரும் காரியம் எதுவும் இல்லை.

துன்பங்களால் துவண்டுவிடவில்லை நம் அன்னை மரியாள். எத்தனை துன்பங்கள் வந்தாலும் நம்பிக்கையை இழந்துவிடாத ஒரு வீரமங்கையாக வலம் வருகிறாள். நம் அன்னை சோதனைகளை தாண்டி சாதனை படைக்க இன்றைய விழா நம்மை அழைக்கின்றது.



### தெலசாலின் பொன்மொழி

துன்ப நேரங்களில் நீங்கள் கொண்டுள்ள விசுவாசம்,
உங்கள்மேல் கடவுளின் ஆசிர்வாதத்தை
பொழியச் செய்யும்(MSF)

# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை





## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
1 கொரி 15:12-20

பதிலுரைப்பாடல்
திபா. 17;1,6,7,8,15

நற்செய்தி
லூக்கா 8;1-3

கொர்னேலியுஸ் மற்றும் சிப்பிரியான்

செப்டம்பர் 2022

**16**

வெள்ளிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **ஆரோக்கியதாஸ்** FSC

சமூகத்தில் ஜாதி, மதம், இனம், கல்வி, அந்தஸ்து இவை எதையும் கருத்தில் கொள்ளாமல், ஒதுக்கப்படுகின்ற, ஒடுக்கப்படுகிற இனம் பெண்ணினமாக உள்ளது. இப்படிப்பட்ட சூழலில் அவர்களுக்கு இயேசு நம்பிக்கையூட்டுவதாக இன்றைய நற்செய்தி அமைந்துள்ளது. இயேசு, தன்னுடைய சமூக உறவுகளில் எந்தவித பாகுபாடும் இல்லாமல் நடந்து கொண்டார். முக்கியமாக அவருடைய இறையாட்சி பணிகளில் பல பெண்கள் இடம் பெற்றனர். அவர்களுக்குரிய முக்கியத்துவத்தை அவர் முழுவதுமாக வழங்கினார். சமூக ஏற்றத்தாழ்வுகளை அவர் சாடினார் ஆணாதிக்க யூத சமூகத்தில் இயேசு பிறந்திருந்தாலும் பெண்களை மதித்து போற்றினார். அரச மாளிகையிலிருந்த பெண்ணிலிருந்து மிகவும் சாமானிய பெண் வரை அவர் உறவாடினார். அன்றாட காட்சிகளாக வலம் வந்தார். பெண்களை அவர் சீடர்களாக்கினார்.

நம்முடைய லசாலிய பணிகளிலும், பள்ளிகளிலும் பெண் குழந்தைகளுக்கு நாம் முக்கியத்துவம் கொடுக்கும் போது நாமும் ஒரு இயேசுவாக மாறுகிறோம். அவர்களுடைய கல்வி முன்னேற்றம் அவர்களை அடுத்தக் கட்ட சமூக நிலைக்கு எடுத்து செல்லும். விழிப்பு நிலையில் இருக்கக்கூடிய பெண்குழந்தைகள் சமூகத்தில் முக்கிய நிலைக்கு உயர்த்தப்படுவது லசாலிய ஆசிரியர்களாகிய நம் ஒவ்வொருவரின் கடமை.



### தெலசாலின் பொன்மொழி

என் அன்பு சகோதரரே, அடிக்கடி கடவுளின் பிரசன்னத்தை உணருங்கள். அதுவே மிகச்சிறந்த செபம் (கடிதம் - 31)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

"நான் என்னதான், எப்படிதான் சொல்லி கொடுத்தாலும் இவங்க தலையில ஏறவே மாட்டேங்குது" என்ற புலம்பலை ஒவ்வொரு நாளும் பள்ளிகளிலும், வீடுகளிலும் கேட்டுக்கொண்டே இருக்கிறோம். இயேசுவுக்கும் இந்த புலம்பல் புதியது அல்ல. அவர் புலம்பவில்லை ஆனால் புரிந்து கொண்டார். இதுதான் நமக்கும் அவருக்கும் உள்ள வேறுபாடு. நன்மைகளும், தீமைகளும் நிறைந்துள்ள இவ்வுலகில் எது பால், எது நீர் என பிரித்து எடுக்க தெரியாமல் தவிக்கின்றோம். சோதனைகள் இல்லாத நாட்களே இல்லை. வெவ்வேறு வடிவங்களில் வெவ்வேறு மனிதர்கள் வழியாய் சோதனைகள் நம்மை நெருக்குகின்றன.

நம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிற குழந்தைகளும் மேற்கூறிய சமூகச் சூழலிலிருந்து வருகின்றனர். அவர்களை சந்திக்கின்ற சவால்கள், வேதனைகள், இன்னல்கள், பறவைகள், பாறைகள், கடும் வெயில், முட்செடிகள் என பல வடிவங்களில் வருகின்றன. பாவம் இந்த குழந்தைகள் அவர்களால் என்னதான் செய்யமுடியும்?! இன்றைய சூழலில் போதை வஸ்துகளும், சமூக ஊடகங்களும் அவர்களை படுத்தும் பாடு மிகவும் பெரிது, கொடியது. இவற்றின் தாக்கத்திலிருந்த அவர்கள் முடிங்கிவிடாமல் லசாலின் உண்மைச் சீடர்களாக நாம் இருக்க வேண்டிய மிகப்பெரிய பொறுப்பு நம்மிடம் கொடுக்கப்பட்டுள்ளது. எப்பேற்பட்ட சூழலிலும் விடாமல் துளிர்து எழும் சிறு செடியாய் நம் குழந்தைகள் மனம் தளராமல் இருக்க நாம் அவர்களை புரிந்து நடப்போம்.

முதல் வாசகம்
1 கொரி 15:35.42-49

பதிலுரைப்பாடல்
திபா. 56:9-13,10-14

நற்செய்தி
லூக்கா 8:4-15

புனித ராபர்ட் பெல்லார்மின்

செப்டம்பர் 2022
**17**
சனிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஆரோக்கியதாஸ் FSC



### தெலசாலின் பொன்மொழி

இயேசு ஆன்மாவின் மீது அக்கறை காட்டுவோரை நல்லாயனுக்கு ஒப்பிடுகிறார். நல்லாயன் தன் ஆடுகளை பற்றி நன்றாக அறிந்துள்ளான். இந்த பண்பு பிறரை வழிநடத்துபவர்களுக்கு முக்கியமாகிறது. நீங்கள் உங்கள் மாணவர்களை பற்றி முழுமையாக அறிந்திருக்க வேண்டும். (MSF)

# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை





## சிந்தனைத் துளிகள்

ஒரு குழப்பமான சூழலை இன்றைய நற்செய்தி நமக்கு கொடுக்கிறது. அதே சமயத்தில் அந்த சூழல்களிலிருந்து நாம் மீண்டு வருவதற்கான வாய்ப்புகளையும் அள்ளி வழங்குகின்றது. பதவியும் பணமும் முக்கியம் என்று வாழ்ந்த மனிதர்கள் எல்லாம் அவைகளின் மேன்மையினை உணருகின்றனர். உங்களிடம் உள்ள செல்வத்தை வைத்து உறவுகளை சம்பாதித்து கொள்ளுங்கள் என்கிறது இன்றைய நற்செய்தி வாசகம்.

பாவேந்தர் பாரதிதாசன் கூறுவதுபோல,

"தான் பெண்டு தன் பிள்ளை சோறு
வீடு சம்பாத்தியம் இவையுண்டு
தானுன்டென் போன்
சின்னதொரு கடுகுபோல்
உள்ளங் கொண்டோன்"

எனக் குறுகிய வட்டத்திற்குள் வாழ மனிதர்கள் பழகிவிட்டனர்.

நம்முடைய மாணவர்களும் சுயநலவாதிகளாக இருக்கின்றார்களா சமூக அக்கறை உள்ளவர்களாக இருக்கின்றார்களா? என்ற வினாவின் பதில் நம் கடமையை சுட்டிக் காட்டுவதாக இருக்கும். ஒரு குழந்தை பல விஷயங்கள் தெரியாமல் பல பொருட்கள் இல்லாமல் இருக்கலாம் ஆனால் மனித உறவுகள் இல்லாமல் இருக்க முடியாது. எனவே மனித உறவுகளை உருவாக்கக்கூடிய அதை பேணி காக்கக்கூடிய மனிதம் போற்றக்கூடிய குழந்தைகளாக உருவாக்குவது லசாலிய ஆசிரியர்களாகிய நம் ஒவ்வொருவரின் கடமை.

முதல் வாசகம்
ஆமோஸ் 8:4-7

இரண்டாம் வாசகம்
1 திமொ 2:1-8

நற்செய்தி
லூக்கா 10:1-13

பொதுக்காலம் 25-ம் ஞாயிறு

செப்டம்பர் 2022

**18**

ஞாயிற்றுக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **ஆரோக்கியதாஸ்** FSC



### தெலசாலின் பொன்மொழி

திருப்பலியின் போது இயேசு உங்களிடம் எதிர்பார்ப்பது உங்கள் ஆன்மா தன்னிலை மறந்து அவரின் பிரசன்னத்தில் அவரை அன்பு செய்ய வேண்டும். (MSF)

COMMUNICATION COMMISSION ★ DE LA SALLE BROTHERS - INDIA ★



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
நீ.மொ. 3:27-35

பதிலுரைப்பாடல்
தி.பா 15:2-5

நற்செய்தி
லூக்கா 8:16-18

புனித
ஜனுவரியுஸ்

செப்டம்பர் 2022

**19**

திங்கள்க்கிழமை

ஒளி என்பது ஒளித்து வைப்பதற்காக அல்ல மாறாக பிரகாசிப்பதற்காகத்தான் அப்படி பிரகாசிக்கும் ஒளியை யாரும் மறைத்து விடமுடியாது அப்படித்தான் மறைக்க முயற்சி எடுத்தாலும் ஒளி அனைத்தையும் தாண்டி எதாவத ஒரு வழியில் வெளியேறி பிரகாசிக்கும். இதைத்தான் இன்றைய நற்செய்தி வாசகமும் விளக்குகின்றது.

லசாலிய ஆசிரியர்களாகிய நமக்கு இறைவன் பல திறமைகளை வழங்கியிருக்கிறார் அந்த திறமைகள் அனைத்தும் வெளிச்சமாக வெளியேறி வரவேண்டியவை அவைகளை நமக்குள் புதைத்து வைப்பது அல்லது மறைக்க முயல்வதோ ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல. அந்த திறமைகள் அனைத்தும் நம்முடைய வளர்ச்சிக்கும் நம்மைச் சார்ந்திருக்கம் நம்முடைய மாணவர்களின் வளர்ச்சிக்கும் உதவியாக இருக்க வேண்டும். இவ்வாறாக ஒவ்வொரு ஆசிரியரும் தன்னிடம் இருக்கக்கூடிய வெளிச்சம் என்ற திறமைகளை மாணவர்களுக்கு வழங்கி அவர்களை பிரகாசிக்க வைப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைய வேண்டும் என்பதைத்தான் இன்றைய சூழல் நம்மிடம் எதிர்பார்க்கிறது.



### தெலசாலின் பொன்மொழி

உங்கள் மாணவர்களின் தேவையை நீங்கள் தொடர்ச்சியாக இயேசுவிடம் ஒப்புக்கொடுக்க வேண்டும். அவர்களை வழிநடத்துவதில் ஏற்படும் சிக்கல்களை அவரிடம் விளக்க வேண்டும். (MSF)

சிந்தனை
அருட்சகோ. ஆரோக்கியதாஸ் FSC

# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை





## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
நீ.மொ. 21:1-6,10-13

பதிலுரைப்பாடல்
திபா. 119:1,27,30,34,35,44

நற்செய்தி
லூக்கா 8:19-21

புனிதர்கள்
ஆண்ட்ரு கிம் மற்றும் தோழர்களும்

செப்டம்பர் 2022

**20**

செவ்வாய்க்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **ஆரோக்கியதாஸ்** FSC

எனக்கு சொந்தக்காரர்கள் யார்? என்ற கேள்வியோடும் அதற்குறிய விடையோடும் இன்றைய நற்செய்தி நம்மை சந்திக்கின்றது. இயேசுவுக்கு சொந்தக்காரர்கள் யார்? என்ற வினாவுக்கு இயேசு பதில் அளிக்கின்றார். இறைவார்த்தையை கேட்டு அதை செயல்படுத்துபவர்களே என்னுடைய சொந்தக்காரர்கள். இறைவார்த்தையை கேட்டால் மட்டும் போதாது. அதை செயல்படுத்தும் செயல் வீரர்களைத்தான் இயேசு உறவுக்காரர்கள் என்று அழைக்கின்றார். தன்னுடைய இரத்த சொந்தங்களையே (அ) தன் இனத்தை சார்ந்தவர்களையே தன் ஊரைச் சார்ந்தவர்களையே சொந்தக்காரர்கள் என அவர் அழைக்க விரும்பவில்லை. கிறிஸ்தவர்கள் என்றே ஒரே காரணத்தினால் மட்டும் இயேசுவுக்கு உறவுக்காரர்களாக மாறிவிட முடியாது என்பது நமக்கு விடுக்கும் எச்சரிக்கை.

புனித தெலசாலுக்கு சொந்தக்காரர்கள் யார்? எந்த மதத்தை சார்ந்தவர்கள் எந்த ஊரை சார்ந்தவர்கள் எந்த நாட்டைச் சார்ந்தவர்கள் (அ) எந்த பள்ளியை சார்ந்தவர்கள் என்ற கேள்விகளுக்கெல்லாம் பதில் ஒன்றே. ஏழைக் குழந்தைகளுக்கு கல்வி புகட்டி அவர்களை வழிநடத்தி அவர்கள் வாழ்வை வெளிச்சம் பெற வைக்கும் ஒவ்வொரு ஆசிரியரும் புனித தெலசாவுக்கு சொந்தக்காரர்களே.



### தெலசாலின் பொன்மொழி

இயேசுவே அனைத்தையும் செய்ய வல்லவர், நீங்கள் அவரின் கருவி என்பதை நீங்கள் நினைக்கிறீர்கள். இதனை பார்த்தே அவர் நீங்கள் கேட்கும் அனைத்தையும் தருவார். (MSF)

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS - INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



முதல் வாசகம்
எபே 4:1-7,11-13

பதிலுரைப்பாடல்
திபா. 19:1-4

நற்செய்தி
மத்தேயு 9:9-13

புனித மத்தேயு

செப்டம்பர் 2022

**21**

புதன்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஆரோக்கியதாஸ் FSC

## சிந்தனைத் துளிகள்

என் பணி யாருக்கு கிடைக்க வேண்டும்? என்ற கேள்வியோடும் இன்றைய நற்செய்தி நம்மோடு பயணிக்கின்றது. இயேசு யாருக்காக வந்தார்? எதற்காக வந்தார்? என்ற வினாக்களுக்கு... இன்றைய வாசகம் பதில் அளிக்கின்றது. மருத்துவர் நோயுற்றவர்க்கு மட்டும் தான் தேவைப்படுகின்றார். மற்றவர்களுக்கு அல்ல எப்படிப்பட்ட நோயுற்றவர்கள் என்றாலும் குழந்தைகளை குழந்தைகளாக ஏற்றுக்கொள்ளாதவர்கள், ஜாதி, மதம் இன பாகுபாடு காட்டுபவர்கள் மனித உரிமைகளை மீறுபவர்கள் சமூக அந்தஸ்தை மட்டுமே நாடுபவர்கள்... இவர்கள்தான் நோயுற்றவர்கள். சமூக கட்டமைப்பாளர்கள் என்றும் அழைக்கலாம். இப்படிப்பட்டவர்களை தேடித்தான் இயேசு வருகின்றார் இவர்களுக்கு தான் மருத்துவ உதவி தேவைப்படுகின்றது.

நம்முடைய பள்ளிகளிலும் பணி தளங்களிலும் சமூக உறவுகளிலும் யார் நோயுற்றவர்கள் என கண்டறியும் பொறுப்பு நமக்கு உண்டு குடும்ப சூழல்களாலும் சமூக புறக்கணிப்புகளாலும் நம்மிடம் வருகின்ற குழந்தைகள் நோயுற்றவர்களாக நம் பள்ளிக்கு வருகின்றார்கள் இவர்களுக்கு மருத்துவம் செய்வதற்காகத்தான் நம்முடைய லசாலிய பணிதளங்கள் நிறுவப்பட்டுள்ளன. ஆசிரியர்களுக்கு "சமூக மருத்துவர்கள்" என்ற மற்றொரு பெயரும் உண்டு. சமூக கட்டமைப்பாளர்கள் என்றும் அழைக்கலாம் எனவே பலவித நோய்களால் பாதிக்கப்பட்டு நம்மிடம் வருகின்ற நம் லசாலிய குழந்தைகளுக்கு நாம் நல்ல மருத்தவராக இருந்து குணமளிக்கும் இயேசுவாக மாறுவதே லசாலிய பணியின் மகத்துவம்.



### தெலசாலின் பொன்மொழி

இயேசுவுக்காக அனைத்தையும் துறந்தவர்களை அவர் எவ்வாறு அன்பு செய்கிறார். மற்றும் எவ்வளவு அருளினை அவருக்கு தருகிறார் என்பதில் உறுதியாய் இருங்கள். எதனையும் கொண்டிராத அவர்கள் மனதில் அவர் தன் ஆவியை நிரப்புகிறார். (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
ச.உ. 1:2-11

பதிலுரைப்பாடல்
திபா. 90:3-6, 12-14,17

நற்செய்தி
லூக்கா 9:7-9

வில்லனோவா நகர் புனித தாமஸ்

செப்டம்பர் 2022
**22**
வியாழக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **ஆரோக்கியதாஸ்** FSC

எதற்காக பயப்பட வேண்டும்? ஏன் பயப்பட வேண்டும்? எப்பொழுது பயப்பட வேண்டும்? என்ற கேள்விகளுக்கு விடை தெரியாமல் விழி பிதுங்கி நிற்கின்றான், ஏரோது மன்னன். இப்படி ஒரு குழப்பம் தேவையா இந்த குழப்பத்திற்கு, பயத்திற்கு, காரணம் என்ன அவன் செய்த பாவமே. குற்றம் செய்த மனது தான் குறுகுறுக்கும் என்பதற்கு நல்ல எடுத்துக்காட்டு ஏரோது மன்னன்.

மடியிலே கனம் இருந்தால் வழியில் பயமிருக்கும் என்பார்கள். ஏரோதுவின் மனதில் பாவம் செய்த கொலை செய்த கனம் இருப்பதால் வாழ்வு முழுவதும் பயந்துதான் வாழ்ந்தான் அந்த பயத்தின் காரணமாக இயேசுவை அவன் இறுதிவரை புரிந்து கொள்ள முடியவில்லை ஆனால் இயேசு மீது நம்பிக்கை வைத்தவர்களுக்கு பயமில்லை.

நாம் பணிபுரிகின்ற இடங்களில் யாருக்காக, எதற்காக பயப்படுகின்றோம். நம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்ற குழந்தைகளின் வாழ்வின் முன்னேற்றத்திற்காக நாம் முயற்சி எடுக்கும் போது நாம் யாருக்கும் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை.

நம்முடைய பாடங்களை முழு தயாரிப்போடு நடத்துவது மூலம் நம்முடைய பயம் நீங்கும். நம் மாணவர்களோடு ஆரோக்கியமான சுமுகமான உறவுகளை கொண்டிருக்கும் போது நாம் யாருக்கும் பயப்படவேண்டிய அவசியம் இல்லை. தலமையாசிரியருக்காகவே, தாளாளர்களுக்காகவே அல்லது பொறுப்பில் இருக்கக்கூடிய பிறர்க்காகவே பயப்படாமல் மாணவர்களின் எதிர்காலத்திற்காக நம் எடுக்கும் முயற்சிகள் பலன் அளிக்க வேண்டும் என்ற நம்பிக்கையோடு பயணிப்போம்.



### தெலசாலின் பொன்மொழி

உங்களுடைய உறவுகள் தெளிவானதாக இருக்கட்டும். மாணவர்களிடையே நிங்கள் காட்டும் அன்பு, ஆர்வம், பொறுமை ஆகியவற்றால் இயேசு கிறிஸ்துவின் பணியை முழுமையாக ஒப்புக்கொடுங்கள். (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
ச.உ 3:1-11

பதிலுரைப்பாடல்
திபா. 144:1-4

நற்செய்தி
லூக்கா 9:18-22

புனித பியோ

செப்டம்பர் 2022

**23**

வெள்ளிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஆரோக்கியதாஸ் FSC

நான் யார்? என்ற கேள்விக்கு பல பதில்கள் வரும் அனைத்து பதில்களும் நம்முடைய பலவித பரிணாமங்களை எடுத்துரைக்கின்றது. இதே கேள்வியைத்தான் இயேசுவும் கேட்கின்றார். சீடர்கள் ஒவ்வொருவரும் விதவிதமான பதில்களை தருகின்றார்கள். அந்த பதில்கள் அனைத்தும் சரியா தவறா என்று பார்ப்பதைவிட ஒவ்வொருவரும் இயேசுவை எவ்வாறு அனுபவிக்கின்றார்கள் என்ற பலவித ஆளுமைகளை காண்பதுதான் சிறப்பு.

நம்முடைய ஆசிரிய பணிகள் இதே கேள்வியை நம் மாணர்வளிடம் கொடுத்தால் என்ன மாதிரியெல்லாம் பதில் எழுவார்கள் என்ற நாம் யோசித்து பார்ப்பது நல்லது இந்த பதில்கள் அனைத்தும் நம்மை பற்றி மாணவர்கள் நினைக்கும் பலவிதமான கருத்துக்களை புரிந்து கொள்ளலாம் மண புழுக்கமும், அழுத்தமும் இல்லாத சூழலில் இருந்து வெளிவரும் பதில்கள் உண்மையானது.

"நம்மைப் பற்றி பிறர் என்ன நினைக்கிறார்கள்? நான் யார்? " என்ற கேள்விகளுக்குள் பல உண்மைகள் புதைந்து கிடக்கின்றன. இந்தக் கேள்விக்குப் பதிலாக ஒருவரின் பண்பு நலன்கள் ஆளுமைத் திறன் சமூகப் பார்வை அனைத்தும் அடங்கியுள்ளன. ஒவ்வொரு மனிதருக்கும் "தான் யார்" என்பது பற்றி பல வகையான எண்ணங்கள் இருக்கும், சிலர் தம்மைப்பற்றி உயர்வாக நினைப்பதும் தாழ்வாக நினைப்பதும், இந்த எண்ணங்களை பொறுத்தே அமைகிறது.



**தெலசாலின் பொன்மொழி**

என் அன்பு சகோதரரே, நீங்கள் காட்டிய இரக்கத்திற்காகவும், தர்மசெயலுக்காகவும் உங்களை பாராட்டுகிறேன். (கடிதம் – 35)

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS - INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

தான் செய்த மாபெரும் அற்புதங்களைக் கண்டு, மக்கள் மகிழ்ச்சியடைந்து புகழ்ந்து கொண்டிருந்த தருவாயில், அடுத்து வரவிருக்கும் துன்பத்தைப் பற்றிப் பேசுகிறார். இயேசு. புகழ்ச்சியைக் கண்டு மயங்கவுமில்லை, வரவிருக்கும் இகழ்ச்சியைக் கண்டு நடுங்கவுமில்லை. தான் சந்திக்க இருக்கும் துன்பத்தைப் பற்றி கூறினால், மக்கள் தன்னை விட்டுப்போய் விடுவார்களோ என்ற அச்சமும அவரிடத்தில் இல்லை, இன்பம் துன்பம் இரண்டையும் ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் இயேசுவிடம் இருந்தது. எதையும் தாங்கும் இதயத்தைப் பெற்றிருந்தார் இயேசு. இயேசுவைப் போன்று இன்பத்தையும் துன்பத்தையும் மன அமைதியோடு எதிர்கொள்ளும் பண்பு பெற்றிட வேண்டும். நல்லது நடக்கும்போது, "கடவுள் இருக்கிறார்" என்பதும் இடர்கள் நேரிடும்போது, "கடவுளுக்கு கண்ணில்லை" என்பதும் பேதமையின் வெளிப்பாடு. "என்ன பவுலின் வார்த்தையின்படி சிறுமையிலும் பெருமையிலும் இறைப்பதம் நாடுவோம்."

எத்துணை இடர் வரினும் இறைப்பதம் சேர்வோம்!

லசாலிய ஆசிரிய பணிகள் இன்பங்களும் துன்பங்களும் மகழ்ச்சியும், வேதனையும் இரவு பகல் போன்று மாறி மாறி வந்த கொண்டே இருக்கும் மகிழ்ச்சியான தருணத்தை கண்டு தன்னை தானே தாழ்த்தி கொள்வதும் லசாலிய பண்பு அல்ல. எல்லா நேரங்களிலும் எது நேர்ந்தாலும் நம்முடைய ஆழ்மனதில் மகிழ்ச்சியை விட்டக்கொடுத்தல் கூடாது. மன அமைதியோடு வாழ்வின் ஏற்றத்தாழ்வுகளை சந்திப்பதும் ஒரு லசாலிய பண்பு.

முதல் வாசகம்
ச.உ. 11:9 12:8

பதிலுரைப்பாடல்
திபா. 90, 3-6,12-14,17

நற்செய்தி
யோவான் 9:43-45

புனித
உபகார அன்னை

செப்டம்பர் 2022

**24**

சனிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஆரோக்கியதாஸ் FSC



**தெலசாலின் பொன்மொழி**

பணிவானவர்களை கொண்டு கடவுள் மிகச்சிறந்த காரியங்களை செய்கிறார். (MSF)

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS - INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
ஆமோ 6:1,4-7

இரண்டாம் வாசகம்
1 திமா 6:11-16

நற்செய்தி
லூக்கா 16:19-31

பொதுக்காலம்
26-ம்
ஞாயிறு

செப்டம்பர் 2022

**25**

ஞாயிற்றுக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஆரோக்கியதாஸ் FSC

பணக்காரன், ஏழை இதில் யார் பெரியவர் என்ற கேள்விக்கு இவ்வுலகம் கூறும் பதில் வேறு; இன்றைய நற்செய்தி வாசகம் கொடுக்கும் பதில் வேறு. பாவம் என்பது நன்மை செய்ய தவறுவதும் தான். இந்த சூழலில் பல ஏழைகள் பாதிக்கப்படுகின்றார்கள். அவர்களுக்கு கிடைக்க வேண்டியது கிடைக்காமல் போகவும் வாய்ப்புண்டு எனவே தான் நன்மை செய்ய தவறுவதும் பாவம். நாம் பணத்தில் மட்டும் பணக்காரர்களாக இருக்கின்றோமா அல்லது பழக்க வழக்கங்களிலும் மனித மாண்புகளிலும் பணக்காரர்களாக இருக்கின்றோமா பணக்காரனாக இருப்பது தவறு கிடையாது ஆனால் அவ்வாறு இருந்து பிறருக்கு உதவாமல் இருப்பதும் தவறு மட்டும் அல்ல பாவமும் கூட.

ஆசிரியர்களாகிய நாம் லசாலிய நாம் லசாலிய கல்வி பணிகளில் ஈடுபடும் பொழுது மிகபெரிய பணக்காரர்களாக மாறுகின்றோம். பல நேரங்களில் பல விதமான சூழல்களிலிருந்து வரும ஒவ்வொரு குழந்தையும் ஏழைதான் அவர்களுக்கு கல்வி அறிவை மட்டும் கொடுக்காமல் அவர்களுடைய முழு வளர்ச்சிக்கு நாம் எடுக்கும். ஒவ்வொரு முயற்சியிலும் அவர்களையும் பணக்காரர்களாக மாற்றும் நம்மிடம் இருக்கக்கூடிய நம்முடைய திறமைகள், அறிவு, பழக்கவழக்கம், உயரிய பண்பாடு, கருணை உள்ளம்... இவை அனைத்தும் நம்மை லசாலிய பணக்காரர்களாக மாற்றுகின்றன. எப்பொழுது எல்லாம் நம் குழந்தைகள் நம்மை தேடி வருகின்றார்களே அல்லது நாம் அவர்களை தேடி செல்கின்றோமா அப்பொழுது எல்லாம் நம்மிடம் இருக்கக்கூடிய பணக்காரத் தன்மை உயருகின்றது.



### தெலசாலின் பொன்மொழி

உங்களால் முடிந்தவற்றை நினைத்து நிம்மதி கொள்ளுங்கள். கடவுளும் அதில் திருப்தியை அடைகிறார். ஆனால் உங்களுக்கு வழங்கப்பட்ட அருளை வீணடிக்காதீர்கள். கடவுளின் அருளை கொண்ட நீங்கள் நினைத்து பார்க்காததை எல்லாம் சாதிக்கலாம். (MSF)

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS-INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

லசாலிய ஆசிரிய பணிக்கு ஏற்ற ஒரு அருமையான வாசகம் இன்று நமக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றது. எந்த ஒரு குழந்தையும் ஏற்று கொள்பவர் கடவுளையே ஏற்றுக்கொள்வதற்க சமம் என்று இன்றைய வாசகம் நம்மை உற்சாகம் படுத்துகின்றது. தெலசாலை பொறுத்தமட்டில் வகுப்பறை என்பது ஆலயத்திற்கு சமமாகும். வகுப்பறை மேஜையை வீடாகவும் கல்வி உபகரணங்களை பலி பொருட்களாகவும் மாணவர்களை பலியில் பங்கேற்பவர்களாகவும் அழகுபடுத்தி பார்ப்பதும் லசாலிய ஆன்மீகம். எனவேதான் வகுப்பறை ஒரு புனிதமான இடமாக மாறுகின்றனது. நம்மிடம் ஒப்படைக்கக்கூடிய ஒவ்வொரு மாணவனை பற்றியும் நாம் தெரிந்து வைத்திருக்க வேண்டிய அவசியம் ஒரு லசாலிய நல்ல மேய்ப்பனக்க அழகாகும் என் குழந்தைகள் என்னை அறிவார்கள் நான் அவர்களை அறிவேன் என்று நம்மால் சொல்ல முடிந்தால் நம்முடைய பணியின் மகத்துவத்தை நாம் புரிந்து கொண்டுள்ளதாக அர்த்தம். லசாலிய ஆசிரியராக இருக்க விரும்புகிறவர்கள் முதலில் குழந்தைகளின் தொண்டராக அவர்களை நேசிப்பவர்களாகி அவர்களோடு அவர்களாய் மாறுபவர்களாக இருத்தல் அவசியம். அவர்களுடைய மாறுபவர்களாக இருத்தல் அவசியம். அவர்களுடைய இன்ப துன்பங்களில் பங்கெடுக்கும்பொழுது அவர்கள் மிகச்சிறந்த லசாலிய குழந்தை நேய ஆசிரியர்களாக மாறுகின்றனர். எனவே தாழ்ச்சியை விரும்பியவர்களாய் தன்னை மறைத்து இறைவனை வெளிபடுத்துபவர்களாக இருக்க அழைக்கப்படுகிறார்கள்.

முதல் வாசகம்
யோபு 1:6-22

பதிலுரைப்பாடல்
திபா. 17:1,2,3,6-7

நற்செய்தி
லூக்கா 9:46-50

புனிதர்கள்
கோஸ்மாஸ்
மற்றும் தமியான்

செப்டம்பர் 2022

**26**

திங்கள்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **ஆரோக்கியதாஸ்** FSC

**தெலசாலின் பொன்மொழி**

என் அன்பு சகோதரரே, கடவுளிடம் உண்மையுடன் செபியுங்கள், அது நிறைவேறும் வரை காத்திருங்கள் (கடிதம் - 37)





# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
யோபு 3:1-4,11-7,20-23

பதிலுரைப்பாடல்
திபா. 88:1-2,3-4,5,6-7

நற்செய்தி
லூக்கா 9:51-56

புனித வின்சென்ட் தே பால்

செப்டம்பர் 2022

**27**

செவ்வாய்க்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **ஆரோக்கியதாஸ்** FSC

யூதர்களால் ஒதுக்கப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் எனக் கருதப்பட்ட சமாரியர்களிடத்தில் இயேசு செல்கிறார். ஆனால், சமாரியரோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை, சமாரிகயர்களைத் தடுத்து நிறுத்துகிறார் இயேசு. தன் சொந்த விருப்பு வெறுப்புகளுக்காகத் தனது ஆற்றலை இயேசு என்றும் பயன்படுத்தியதில்லை, அவர் செய்த அற்புதங்களை உற்றுநோக்கும் போது அதில் ஒன்றுகூடத் தன்னலத்துக்காக அவர் செய்ததில்லை என விளங்கும். பிறர் நலனுக்காக தனது நேரத்தை ஆற்றலைப் பயன்படுத்தியவர் இயேசு. தங்களை மதிக்காத மக்கள் கூட்டத்திடம் தாங்கள் யார் என்று காட்ட வேண்டும். என்று கோபப்பட்ட சீடர்களை அமைதிப்படுத்துகிறார் இயேசு. இயேசுவின் மீட்பு கட்டாயத்தினால் நம்மீது திணிக்கப்படுவதில்லை. அன்பினால் வெளிப்படுத்தப்படும் இயேசுவின் நற்செய்தியை ஏற்றுக்கொண்டால் நிலைவாழ்வு வசப்படும். இல்லையெனில் இழப்பு நிச்சயம்...ஏற்றுக்கொள்ளுவதும் இழந்து போதலும் நம் முடிவில் உள்ளது.

நல்ல சமாரியனையும் சமாரிய பெண்களையும் யூத சமூகம் அடிமைகளாக வைத்திருந்தது. இயேசு அவர்களையும் மனிதர்களாக மதிக்க வேண்டும் என்று பல உதாரணங்களுடன் எடுத்துரைக்கின்றார். சமூகத்தில் ஒதுக்கப்பட்டவர். ஒடுக்கப்பட்டவர்களும் மதிப்பு இழந்தவர்களும் நம்முடைய லசாலிய பள்ளிகளில் மாணவர்களாக சேர்ந்ததில் ஒரு மகிழ்ச்சி தரக்கூடிய விஷயம். இதை நினைத்து பெருமை படி வேண்டியது. நம்முடைய மகிழ்ச்சிக்கு காரணமாக இருக்க வேண்டும்.



**தெலசாலின் பொன்மொழி**

உங்கள் மாணவர்களின் நற்பண்பிற்காக அவர்களை உற்சாகப்படுத்தியுள்ளீர்களா? MSF)

# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை





## சிந்தனைத் துளிகள்

இயேசவை பின்பற்றுபவர் என்றால் என்ன? அவரை பின்பற்றுவது எளிதான காரியமா என்ற கேள்விகள் எல்லாம் இன்று பதிலளிக்கப்படுகின்றது. அவரை பின்பற்றுவது என்றால் தலை சாய்க்கக்கூட இடம் இல்லை என்ற சவாலை விடுக்கின்றான். பொன்னும் பொருளும் சம்பாதிக்கும் இவ்வுலகில் தலை சாய்க்கக்கூட இடம் இல்லை என்று கூறுவது ஒரு மிகப்பெரிய சவால் எந்த ஒரு நிபந்தனையும் இல்லாமல் எந்த ஒரு எதிர்பார்ப்பும் இல்லாமல் முழு மன சுதந்திரத்துடன் அவரை பின்பற்றுவதுதான் இயேச நமக்கு விடுக்கும் வேண்டுகோள்.

புனித தெலசாலை பின்பற்றுவதும் எளிதான காரியமா என்றால் அதற்க்கூரிய பதில் ஒவ்வொருவரிடமும் வேறுபட்டு காணப்படும் சொந்த விருப்பு வெறுப்புகளை விட்டுக்கொடுத்து மாணவர்களின் விருப்பங்களை மட்டுமே மதித்து முக்கியத்துவம் கொடுத்து நடந்து கொள்ளக்கூடிய நல்ல ஆசிரியர் மட்டும்தான் ஒரு லசாலிய ஆசிரியர் தன்னுடைய எண்ணங்களிலும் செயல்களிலும் குழந்தைகளை மையமாக வைக்கும்பொழுது ஒரு இனிமையான உண்மையான லசாலிய ஆசிரியராக மாறுகின்றார்.

முதல் வாசகம்
யோபு 9:1-12, 14-16

பதிலுரைப்பாடல்
திபா. 88:9-14

நற்செய்தி
லூக் 9:57-62

புனித
வென்செஸ்லாஸ்

செப்டம்பர் 2022

**28**

புதன்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஆரோக்கியதாஸ் FSC



**தெலசாலின் பொன்மொழி**

கடவுளே உமது அன்பால் என்னை நிரப்பியருளும். உம்மை அன்பு செய்யவும், என் சகோதரனை அன்பு செய்யவும் எனக்கு அருள்தாரும் (Interior Prayer)

COMMUNICATION COMMISSION DE LA SALLE BROTHERS - INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
தானியேல் 7:9-10,13-14

பதிலுரைப்பாடல்
திபா. 138:1-5

நற்செய்தி
யோவான் 1:47-51

புனிதர்கள் மிக்கேல், கபிரியேல், ரபேல் முதன்மை வானதூதர்கள்

செப்டம்பர் 2022

**29**

வியாழக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஆரோக்கியதாஸ் FSC

வானதூதர்கள் எனப்படுவோர் கடவுளின் தூதர்களாகச் செயல்படுபவர்கள். மனிதருக்கும் கடவுளுக்கும் இடையே தோழமையை வளர்ப்பவர்கள், அவர்களுக்கு ஞானமும் அறிவும் அழியாத் தன்மையும் உள்ளன. எப்போதும் இறைவனின் திருவுளத்தை நிறைவேற்றி கடவுள் நம்பிக்கையில் வாழ்பவர்களைப் பாதுகாப்பவர்களாக இருப்போரே வானதூதர்கள்.

மிக்கேல்: "மிக்கேல்" என்றால் "கடவுளுக்கு நிகர் யார்?" என்பது பொருள். போர் வீரராகக் காட்சியளிக்கும் இவர் சாத்தானை மிதித்து அவரின் சோதனைகளை முறியடிப்பவர். வாழ்வின் பல சோதனைகளைச் சந்திக்கும்போது இவரை நினைத்துக் கொண்டால், மனதில் தானாகவே தைரியம் பிறக்கும்.

கபிரியேல் : "கபிரியேல்" என்றால் "கடவுளின் ஆற்றல்" என்பது பொருள். உலகம் மீட்படைய மெசியா பிறக்கப்போகிறார். என்ற நல்ல செய்தியை அன்னை மரியாவுக்கு உரைத்தவர். மனம் தளராது நற்செய்தியைப் பரப்ப ஆர்வமூட்டுபவர். நம்பிக்கையை வீழ்த்தும் சந்தேகங்களைக் களைபவர்.

இரபேல் : "இரபேல்" என்றால் "கடவுள் நலமளிக்கிறார்" என்பது பொருள், எந்த ஒரு செயலையும் வெற்றிகரமாக செய்துமுடிக்கத் துணையாளராக வருபவர். நல்ல நண்பராக வழிகாட்டுபவர். தோபியா சாராவின் இல்லற வாழ்வுக்கு இடையூறு விளைவித்த பேயை ஓட்டியதுபோல வாழ்வின் துன்பங்களை, நோய்களைப் போக்க உதவுபவர். கேட்காமலே உதவிசெய்பவர்.

வானதூதர்கள் வழியில் நாம் என்ன செய்ய வேண்டும்? 1) ஒருவருக்கொருவர் வானதூதராக மாறுவோம். 2) சோதனைகளை எதிர்கொள்ள உறுதுணையாக இருப்போம். 3) நல்ல வார்த்தைகளைப் பேசும் நாவைக் கொண்டிருப்போம். 4) நோயகற்றும் மருந்தாக நாம் சொல்லும், செயலும் அமையட்டும் ஆற்றலோடு நலமளிக்கும் நம் கடவுளுக்கு நிகர் யார்?

### தெலசாலின் பொன்மொழி

ஆதிதூதர்கள் பெருவிழா :
வானதூதர்களை போன்ற நல்ல ஆசிரியர்கள் மாணவர்களுக்கு தேவை (MSF)





# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

பல அரும்பெரும் செயல்களைச் செய்தும் பெத்சாயிதா, கொராசின் நகர் மக்கள் மனம் மாற்றம் அடையவில்லை. இயேசுவையும் நம்பவில்லை, ஆகவே தடித்த வார்த்தைகள் கொண்டு அவர்களை தாக்குகிறார் இயேசு, தன் செல்வ வளங்களையும் புகழ்ச்சியையும் கொண்டு இறுமாந்திருந்த கப்பர்நகூம் ஊரைப் பார்த்து "பாதாளம் வரை தாழ்த்தப்படுவாய்" என்கிறார் இயேசு.

"டைட்டானிக்" கப்பல் கட்டப்பட்டபோது, இதை யாராலும் அசைக்க முடியாது, இதைப்போல் யாராலும் கப்பல் கட்ட முடியாது, என்ன வந்தாலும், எது மோதினாலும் அதை மூழ்கடிக்க முடியாது என இறுமாந்திருந்த கப்பலின் மாலுமி மற்றும் உரிமையாளர்கள் கண்முன், கண்ணுக்குப் புலப்படாத பனிப்பாறைகள் மீது கப்பல் மோதி சுக்குநூறாய் உடைந்தது. இறுமாப்பு அழிவைத் தரும். ஆபத்தைத் தரும்.

நான் என்ற அகந்தை நகரத்திற்கு வழிகாட்டும். அழகு, அதிகாரம், பதவி, திறமை எனப் பல்வேறு வகைகளில் தலைசிறந்து விளங்கும் பலரும், "என்னைப் போல் யாருளர்?" என்று எண்ணுபவர்களும் ஒன்றுமில்லாமல் போகிறார்கள் என்பது நிதர்சனம்.

"ஐயோ உனக்குக் கேடு" என்று வாசிக்கும்போது பயமாகி இருந்தாலும் அகந்தையினால் இறுமாப்பினால் கேடு வந்து சேரும் என்று இயேசு உண்மையைச் சொல்கிறார் என்பதில் ஐயமில்லை. பொய்யான உண்மை சுடும். உண்மை பொய் சுகம் தரும்.

முதல் வாசகம்
யோபு 38:1,12-21 40: 3-4

பதிலுரைப்பாடல்
திபா. 139:1-3,7-10,13-14

நற்செய்தி
லூக்கா 10:13-16

புனித ஜெரோம்

செப்டம்பர் 2022

**30**

வெள்ளிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **ஆரோக்கியதாஸ்** FSC



### தெலசாலின் பொன்மொழி

நீங்கள் தூய ஆவியினால் நிரப்பப்பட வேண்டும் என விரும்பினீர்கள் ஆனால், மறைநூலே உங்களின் முதன்மையான பாடமாக இருக்க வேண்டும். சிறப்பாக நற்செய்தியே உங்கள் வாழ்வின் வழிகாட்டியாக இருக்க வேண்டும்.(MSF)


# அன்றாட இறை உணவு - செப்டம்பர் 2022

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1<br>1 கொரி 3 : 18-23<br>திபா 24:1-6<br>லூக் 5:1-11 | 2<br>1 கொரி 4 : 1-5<br>திபா 37 : 3-6, 27-28, 39-40<br>லூக் 6:1-5 | 3<br>1 கொரி 4 : 6-15<br>திபா 145 : 17-21<br>லூக் 6: 1-5 |
| 4<br>சாஞா 9:13-18<br>திபா 90:3-6,12-14,17<br>பில 9ஆ-10,12-17<br>லூக் 14: 25-33 | 5<br>இபா 8:6-7<br>திபா 148:1-2,11-14<br>1 கொரி 6:1-11<br>திபா 149 : 1-6அ, 9 ஆ | 6<br>1 கொரி 6:1-11<br>திபா 149:1-6அ, 9ஆ<br>லூக் 6:12-19 | 7<br>1 கொரி 7 : 25-31<br>திபா 45 : 10-11, 13-16<br>மத் 6: 20-26 | 8<br>மீக் 5:2-5அ<br>திபா 13:5,6<br>உரோ 8: 28-30<br>மத் 1 1-6, 18-23 | 9<br>1 கொரி 9 :16-19,22-27<br>திபா 84:2-5,11<br>லூக் 6 : 39 - 42 | 10<br>1 கொரி 10:14-22<br>திபா 84:2-5,11<br>லூக் 6 : 39-42 |
| 11<br>விப 32:7-11,13-14<br>திபா 51:1-2,10-11,15-17<br>1 திமொ 1:12-17<br>லூக் 15 : 1-32 | 12<br>1 கொரி 11:17-26<br>திபா 40 : 6-9,16<br>லூக் 7:1-10 | 13<br>1 கொரி 12;12-14, 27-31<br>திபா 100 : 1-5<br>லூக் 7 : 11-17 | 14<br>எண் 21 : 4-9<br>திபா 78 : 1-2, 43-38<br>பிலி 2 : 6-11<br>யோவா 3 : 13-17 | 15<br>எபி 5:7-9<br>திபா 31:1-5,14-15,19<br>யோவா 19:25-17 | 16<br>1 கொரி 15:12-20<br>திபா 17:1,6,7,8,15<br>லூக் 8:1-3 | 17<br>1 கொரி 15:35-37,42-4<br>திபா 56: 9-13<br>லூக் 8: 4-15 |
| 18<br>ஆமோ 8:4-7<br>திபா 113:1-2,4-8<br>1 திமொ 2 : 1-8<br>லூக் 16:1-13 | 19<br>நீமொ 3: 27-35<br>திபா 15:2-5<br>லூக் 8: 16-18 | 20<br>நீமொ 21: 1-6, 10-13<br>திபா 119: 1,27,30,34,35,44<br>லூக் 8 : 19-21 | 21<br>எபே 4 :1-7, 11-13<br>திபா 19 :1-4<br>மத் 9 : 9-13 | 22<br>சஉ 1: 2-11<br>திபா 90 : 3-6,12-14,17<br>லூக் 9:7-9 | 23<br>சஉ 3: 1-11<br>திபா 144 : 1அ, 2அ-இ, 3-4<br>லூக் 9 : 18-22 | 24<br>சஉ 11: 9-12:8<br>திபா 90 : 3-6,12-14, 17<br>லூக் 9 : 43ஆ-45 |
| 25<br>ஆமோ 6 :1,3-7<br>திபா 146:7,8அ-9அ, 9ஆஇ-10<br>1 திமொ 6:11-16<br>லூக் 16:19-31 | 26<br>யோபு 1: 6-22<br>திபா 17:1-3,6-7<br>லூக் 9 : 46-50 | 27<br>யோபு 3 : 1-4அ, 11-17, 20-23<br>திபா 88:1-7<br>லூக் 9 : 57-62 | 28<br>யோபு 9 : 1-12,14-16<br>திபா 88: 9 ஆஇ-14<br>லூக் 9:57-62 | 29<br>தானி 7:9-10,13-14<br>திபா 138:1-5<br>திவெ 12:7-12அ<br>யோவா 1 : 47-51 | 30<br>யோபு 38 : 1,12-21:40:3-4<br>திபா 139:1-3,7-10,13-14அஆ<br>லூக் 10:13-16 | |

# லசாலிய இறை அழைத்தல் கல்வி பணிக்கு அர்ப்பணிக்க தயாரா?



வாருங்கள், லசாலிய குடும்பத்தோடு வாழ்வதற்கு



## இம்மாத லசாலிய புனிதர்

## புனித சாலமன் லெக்லெர்க் (1745-1792)

**திருவிழா : செப்டம்பர் 2**

### ஜெபம்

எல்லாம் வல்ல இறைவா,
எம் இதயத்தின் தலைவா,
உமது மறைசாட்சியான புனித சாலமோனின்
முன்மாதிரிகையினை நாங்களும் தழுவிக்கொள்ள
எங்களை திடப்படுத்தியருளும்.

முரண்பாடுகளும் குற்றங்களும் மலிந்துள்ள
நிலையற்ற இவ்வுலகினில் எங்கள்
முன் நிற்கும் அநீதிகளை
நாங்களும் எங்களிடம் நம்பி ஒப்படைக்கப்பட்ட
எங்களது சிறார்களும்
நெஞ்சுரத்தோடு எதிர்கொள்ள
எங்களை தயார்படுத்தும்.

என்றுமே உம் வழியினில், உண்மையில்
வாழ்வினினில் நம்பிக்கையோடு நிற்க
எமக்கு அருள் தாரும். ஆமென்.

வெளியீடு
தகவல் தொடர்பு குழு
தெலசால் சபை, இந்திய மறைப்பணித்தளம்.
இளைஞர் நகர் புல்லூத்து, நாகமலை, மதுரை – 625019

அடுத்த இதழில் செப்டம்பர் மாதச் சிந்தனையைத் தொகுத்து வழங்குபவர் : அருட்சகோ. பிரினேஷ் FSC,

Lasad For India | De La Salle Bros-LASAD India | www.lasalleindia.org